

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தொகுதி ஊசூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு வேலூர் ஒன்றியச் செயலாளர் ஞானசேகரன் மாவட்ட கவுன்சிலர், தா.பாபு, காசி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் கெஜல்நாயக்கன்பட்டியில் அமைந்துள்ள இ.வெ.நா. ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ வழங்கினார். உடன் கந்திலி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.கே.டி.அசோக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வடிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சின்னசேலம் வட்டம், அனுமனந்தல் கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப்.1-

**கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், அனுமனந்தல் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், அனுமனந்தல் கிராமத்தைச் சேர்ந்த புகழேந்தி (வயது 27) த/பெ. ஆறுமுகம், மின்சாரம் சார்ந்த பணிகளை செய்து வந்த நிலையில் 29.01.2026 அன்று காலை சுமார் 9.30 மணியளவில் அனுமனந்தல் கிராமம், சன்னாசி கோவில் தெருவில் உள்ள தனியாருக்குச் சொந்தமான வீட்டில் சுவரை துளையிடும் கருவி மூலம் துளையிட்டுக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### நகர்ப்புற வீட்டுவசதி தட்டுப்பாட்டைத் தீர்க்க

# ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, பிப்.1–

விரைவாக நகரமயமாகும் நகரங்கள் மற்றும் அதிக மக்கள் தொகை உள்ள பகுதிகளில் வீட்டுப் பற்றாக்குறையை சரி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்று தயாநிதிமாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறைக்கு நாடாளுமன்றக் குழு துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதிமாறன் எம்.பி. சில கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் வருமாறு:

ஒன்றிய அரசின் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா நகர்ப்புறம் (PMAYU), மலிவு வாடகை வீட்டு வளாகங்கள் (ARHC) மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ஆகிய திட்டங்களின் கீழ், நகர்ப்புற வீட்டுப் பற்றாக்குறை குறித்த கடந்த மூன்று ஆண்டு தரவுகளை ஒன்றிய அரசு, ஒவ்வொரு ஆண்டும் தொகுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்களை மாநில வாரியாகத் தெரிவிக்கவும்.

விரைவாக நகரமயமாகும் நகரங்கள் மற்றும் அதிக மக்கள் தொகை உள்ள பகுதிகளில் வீட்டுப் பற்றாக்குறையை சரி செய்ய, தமிழ்நாடு அரசு சமர்ப்பித்த முன்மொழிவுகளின் நிலை என்ன?

PMAYU அல்லது ARHC திட்டங்களின் கீழ், தமிழ்நாட்டிலிருந்து ஏதேனும் குறைந்த விலை வீடுகள், வாடகை வீடுகள் திட்டங்கள் அல்லது நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு ள்ளதா? அல்லது பரிசீலனையில் உள்ளனவா?

அப்படியானால், அதில் அங்கீகரிக்கப்பட்ட அலகுகள் (UNITS), ஒன்றிய அரசின் பங்கு விடுவிக்கப்பட்ட தொகை, நிலுவையில் உள்ள தொகை (ஏதேனும் இருந்தால்), முடிக்கும் கால அவகாசம் மற்றும் தரப்பட்ட அங்கீகாரம், நிதி விடுவிப்பில் தாமதம் ஏற்பட்ட காரணங்கள் உள்ளிட்ட விவரங்களைத் தெரிவிக்கவும்.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி, நகர இந்து மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் மாணவ – மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை நகராட்சி தலைவர் உமாபாய் சிவாஜிகணேசன் வழங்கினார். நிகழ்வில் மாவட்டப் பிரதிநிதி சாரதி, நகர மன்ற உறுப்பினர்கள் சாந்தி பாபு, சித்ரா சங்கர், ஷாயின் பேகம், வார்டு செயலாளர்கள், பள்ளி தாளாளர், பள்ளியின் தலைமை ஆசிரியர், பள்ளியின் நிர்வாகிகள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நீண்ட காலக் கோரிக்கையான

# நந்தன் கால்வாய் திட்டம் - அரசாணை வெளியீடு!

## முதல்வருக்கு அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. நன்றி!



விழுப்புரம், பிப். 1–

நீண்ட கால கோரிக்கையான நந்தன் கால்வாய் திட்டத்தை செயல்படுத்த அரசாணை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

1952ஆம் ஆண்டு முதல், வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ”நந்தன் கால்வாய்; நந்தன் கால்வாய் என முழங்கிய குரலுக்குச் சொந்தக்காரரும், அப்போதைய விக்கிரவாண்டி தொகுதியின் முதல் சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சராகச் சிறப்பாகப் பணியாற்றியவரும், கழகத்தின் காவலர் எனப் பேரறிஞர் அண்ணா அவர்களாலும், கழகத்தின் கொள்கைக் குன்று என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலும் பெருமையுடன் போற்றப்பட்டவருமான, மக்களால் அன்புடன் ”ஏ.ஜி. என அழைக்கப்பட்ட ஐயா ஏ.கோவிந்தசாமி அவர்களின் கனவுத் திட்டமான ”நந்தன் கால்வாய் திட்டத்திற்கான அரசாணை வெளியிடப்பட்ட தருணத்தை நான் காணும் பெருமை பெற்றுள்ளேன்.

விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட அன்னியூர் என்ற சிறிய கிராமத்தில், அரசு கடைநிலை ஊழியரின் மகனாகப் பிறந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் அடிப்படைத் தொண்ட னாக இணைந்து, 1987ஆம் ஆண்டு முதல் தி.மு.க. இளைஞர் அணியில் பயணத்தைத் தொடங்கி, 1989 ஆம் ஆண்டு முதல் நந்தன் கால்வாய் பாசன விவசாயிகள் சங்க செயலாளராகப் பொறுப்பேற்று, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், கழக பொதுக்குழு உறுப்பினராகவும், மாநில தி.மு.க. விவசாய அணித் துணைச் செயலாளராகவும், மாநில தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளராகவும் எனப் பல்வேறு பொறுப்புகளை எனக்கு அளித்து, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் என்னை திமுக வேட்பாளராக அறிவித்து, சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்த என் அரசியல் வாழ்வின் வழிகாட்டி, என் இதய தெய்வம் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, என் இதயம் கனிந்த நன்றிகளை இத்தருணத்தில் பணிவுடன் உரித்தாக்குகிறேன்.

**சாத்தனூர் அணையின் உபரி நீர்!**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விக்கிர வாண்டி சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று, நான் நிகழ்த்திய முதல் கன்னிப் பேச்சிலேயே நந்தன் கால்வாய் திட்டம் குறித்த கோரிக்கையை உரக்க முன்வைத்தேன். அந்தக் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் கனிவுடனும் உறுதியுடனும் ஏற்று, கடந்த 28.01.2025 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், நந்தன் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்படும் என வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சாத்தனூர் அணையின் உபரிநீரை 23 கிலோ மீட்டர் நீள ஊட்டுக்கால்வாய் மூலம் நந்தன் கால்வாயுடன் இணைக்க, அரசாணை எண்.5 – நீர்வளத் துறை – நாள் 29.01.2026 என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அரசாணையை வெளியிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் ஐயா துரைமுருகன் அவர்களுக்கும், கழகத் துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி அவர்களுக்கும், கழக முதன்மைச் செயலாளர் ஐயா கே.என்.நேரு அவர்களுக்கும், கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் திராவிட ஆழ்வார் ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கும், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் அண்ணன் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், விக்கிரவாண்டி தொகுதி மக்கள் பணிகளுக்காக எப்போதும் எனக்குத் துணை நிற்கும் ஆற்றல்மிக்க மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் பொன். கௌதமசிகாமணி அவர்களுக்கும், நந்தன் கால்வாய் பாசன விவசாயிகளின் சார்பாகவும், என் சார்பாகவும், என் மனமார்ந்த நன்றிகளையும் வணக்கங்களையும் இத்தருணத்தில் பணிவுடன் காணிக்கையாக்குகிறேன்.

இவ்வாறு அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, நெடுமானூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் கடந்த ஆண்டு பத்தாம் வகுப்பு தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிக்கு ரூ.50,000, இரண்டாம் பரிசு ரூ.20,000, மூன்றாம் பரிசு ரூ.10 ஆயிரம் பரிசுத்தொகை முன்னாள் மாணவர்கள் சார்பில் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ 26.01.2026 திங்கள் கிழமை அன்று நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வழங்கினார், இந்த நிகழ்ச்சியில் ஒன்றியக் குழு பெருந்தலைவர் ப.ராஜவேல், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் ப்ரியா பாண்டியன், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.தமீம்

### பிப்ரவரி 1 (2022)



இளம்வயதிலேயே கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மாநிலம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் வட்ட பிரதிநிதி, நகர துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1984ஆம் ஆண்டு நடைபெற்ற புதுவையில் நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தை திறந்து வைத்தவர்.

1996ல் கோவை மாநகராட்சி உறுப்பினராக வெற்றி பெற்று, மாநகராட்சி பணி நியமனக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம் !

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு, தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி மேற்கு மாவட்டம்**

அமைப்பாளர்–ஆ. முத்துகிருஷ்ணன் ஊர்க்காடு, அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) ச. ராஜதுரை 36, கீழகண்டளவு தெரு, சேரன்மகாதேவி, சேரன்மகாதேவி வட்டம், திருநெல்வேலி மாவட்டம். 2) செ. நயினார் 11/62, இ4, மாணிக்கம் நகர், ஓ. துலுக்கர்பட்டி, பாப்பாக்குடி, திருநெல்வேலி – 627602. 3) ஜெ.ஏ. விஜய் 4ஏ, தெற்கு தோப்புத் தெரு, அம்பாசமுத்திரம் – 627401, திருநெல்வேலி மாவட்டம். 4) எம். சுப்பையா 4/57, நடுத் தெரு, சிவலார்குளம், ஆலங்குளம், திருநெல்வேலி மாவட்டம். 5) மு. பார்வதி 11/37, தெற்கு தெரு, தாழை சுப்பிரமணியபுரம், குத்தபாஞ்சான், ஆலங்குளம், திருநெல்வேலி மாவட்டம்.

**தென்காசி தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் –செ. மஹ்முதா 3/1, ஜாஹீர் உசேன் நகர், 4வது தெரு, வடகரை, தென்காசி மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் – 1) எஸ். சக்தி கதிர் 3, பார்க் தெரு, நன்னகரம், மேலகரம், தென்காசி மாவட்டம். 2) இ. எட்வின் தர்மராஜ் 13–4–17, பொட்டல் மாடசாமி கோவில் தெரு, சுரண்டை, தென்காசி மாவட்டம் 3) வே. ராஜா 2/307, தெற்கு காலனி தெரு, மங்களாபுரம், கடையநல்லூர், தென்காசி மாவட்டம் 4) டி. தீபன் சக்கரவர்த்தி 5/201, சமுத்திரபுரம் தெரு, குறும்பாலர்பேரி, குலசேகரப்பட்டினம், தென்காசி – 627806 5) ஏ. கார்த்திகா 45/24ஏ, களக்கோடி தெரு, தென்காசி – 627811 6) க. கலைச்செல்வன் 4/80, வடக்குத் தெரு, ருக்குமணியம்மாள்புரம், வீ.கே.புதூர் தாலுக்கா, தென்காசி மாவட்டம்

**சிவகங்கை மாவட்டம்**

சிவகங்கை மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக

பி. ஜெபத்துரை, (12/13, அய்யனார்புரம், 2வது வீதி, செக்காலை சாலை, காரைக்குடி – 630002) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 30-01-2026.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந. மணிமொழியன்

### பிப்ரவரி 1 (1991)



பள்ளிப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

நாமக்கல் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை பொறுப்பு வகித்தவர்

தலைமைக் கழகச் சொற்பொழிவாளராக பணியாற்றி கழகத்தின் கொள்கைகளை மாநிலம் முழுவதும் பரப்பியவர்.

நாமக்கல் நகர கூட்டுறவு வங்கித் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

‘மணிமொழியனிடம் மணி(பணம்) குறைவாக இருந்தாலும், நல்ல மொழி உள்ளது’ என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு, இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.